04.12.2018 காலை முரளி ஓம் சாந்தி
பாப்தாதா, மதுபன்

---

இனிமையான குழந்தைகளே - உங்களுடைய ஆன்மீக யோகம் என்றைக்குமே தூய்மையாக ஆவதற்காக ஆனதாகும். ஏனெனில் நீங்கள் தூய்மையின் கடலுடன் யோகம் (நினைவு யாத்திரை) செய்கிறீர்கள். தூய்மையான உலகத்தை ஸ்தாபனை செய்கிறீர்கள்.

கேள்வி:

நிச்சய புத்தி குழந்தைகளுக்கு முதன் முதலில் எந்த நிச்சயம் உறுதியாக இருக்க வேண்டும்? அந்த நிச்சயத்தின் அடையாளம் என்னவாக இருக்கும்?

பதில்:

நாம் ஒரு தந்தையின் குழந்தைகள் ஆவோம். தந்தையிடமிருந்து நமக்கு தெய்வீக சுய இராஜ்யம் கிடைக்கிறது என்ற முதன் முதல் நிச்சயம் வேண்டும். நிச்சயம் ஆகி விட்டது என்றால் நாம் செய்த பக்தி இப்பொழுது முடிவடைந்து விட்டது என்பது உடனே புத்தியில் வரும். இப்பொழுது சுயம் பகவான் நமக்கு கிடைத்துள்ளார். நிச்சய புத்தி உடைய குழந்தைகளே வாரிசு ஆகிறார்கள்.

பாடல்:

ஓ தூரத்து பிரயாணியே.. .. ..

ஓம்சாந்தி.

தூரத்து பிரயாணிகளோ அனைவருமேதான் ஆவார்கள் என்று தந்தை வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். அனைத்து ஆத்மாக்களும் வெகு தொலைவில் இருக்கும் பரந்தாமத்தில் இருப்பவர்கள் ஆவார்கள். இதுவும் சாஸ்திரங்களில் உள்ளது. சூரியன் சந்திரனின் ஒளி இல்லாத தொலை தூரமான இடத்தில் ஆத்மா இருக்கிறது. மூல வதனம் மற்றும் சூட்சும வதனத்தில் ஒன்றும் நாடகம் இல்லை. நாடகம் இந்த ஸ்தூல வதனத்தினுடையது ஆகும். அதற்குத் தான் மனித சிருஷ்டி என்று கூறப்படுகிறது. மூல வதனம் மற்றும் சூட்சும வதனத்தில் ஒன்றும் 84 பிறவிகளின் சக்கரம் இல்லை. சக்கரம் மனித சிருஷ்டியில் காண்பிக்கப்படுகிறது .மனித சிருஷ்டி என்றால் என்ன? மனிதன் எதனால் உருவாக்கப்பட்டு இருக்கிறான்? மனிதனுக்குள் ஒன்று ஆத்மா உள்ளது மற்றொன்று சரீரம் ஆகும். 5 தத்துவங்களின் பொம்மை ஆகிறது. அதில் ஆத்மா பிரவேசம் செய்து தனது பாகத்தை நடிக்கிறது. எனவே அனைவரும் தொலை தூரத்தில் வசிப்பவர்கள் தான். ஆனால் நீங்கள் நிச்சயம் செய்கிறீர்கள். மனிதர்களிடம் நிச்சயம் இல்லை. என்னை தூர தேசத்தில் வசிப்பவர் என்று கூறுகிறீர்கள்.

ஆனால் ஆத்மாக்களாகிய உங்கள் அனைவரது வசிக்குமிடம் ஒன்று தான் என்று தந்தை புரிய வைத்துள்ளார். அந்த நாடகத்தில் தனது பாகத்தை ஏற்று நடிப்பவர்களுக்கோ ஒவ்வொரு வருக்கும் அவரவர் வீடு இருக்கும் அல்லவா? அங்கிருந்து வந்து அவரவர் பாகத்தில் நடிக்கிறார்கள். நாம் அனைவரும் ஒரே ஒரு தந்தையின் குழந்தைகள் ஆவோம். பரந்தாமம் என்ற ஒரே வீட்டில் இருப்பவர்கள் ஆவோம் என்பதை இங்கு குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துள்ளீர்கள். அது பிரம்ம மகா தத்துவம் ஆகும். இது ஆகாய தத்துவம் ஆகும். இங்கு பார்ட்டை நடிக்கிறார்கள். இரவு பகல் ஆகிறது. எனவே சூரியன் சந்திரன் கூட உள்ளது. மூலவதனத்திலோ இரவு பகல் இருப்பதில்லை. இந்த சூரியன் சந்திரன் ஆகியவை ஒன்றும் தேவதைகள் அல்ல. இதுவோ மேடையை பிரகாசமாக்கும் ஒளி விளக்குகள் ஆகும். பகலில் சூரியன் ஒளி அளிக்கிறது. இரவில் சந்திரனின் ஒளி இருக்கும். இப்பொழுது எல்லா மனிதர்களும் முக்தி தாமம் போகலாம் என்று விரும்புகிறார்கள். பகவான் மேலே இருக்கிறார் என்பதை அறிந்துள்ளார்கள். பகவானைக் கூட ஹே பரமபிதா பரமாத்மா என்று நினைவு செய்யும் பொழுது புத்தி மேலே சென்று விடும். ஆத்மா புரிந்துள்ளது ஆனால் அஞ்ஞானம் படிந்துள்ளது .நாம் இங்கு இருப்பவர்கள் அல்ல என்பதையும் அறிந்துள்ளார்கள். அவர் நமது தந்தை ஆவார். வாயால் ஓ காட் ஃபாதா

என்றும் கூறுகிறார்கள். பிறகு எல்லோரும் ஃபாதர் (தந்தை), காட் இறைவன் சர்வவியாபி ஆவார் என்று கூறி விடுகிறார்கள். எல்லோருமோ ஃபாதர் (தந்தை) கிடையாது என்று குழந்தைகளுக்குப் புரிய வைத்துள்ளார். அனைத்து ஆத்மாக்களும் தங்களுக்குள் சகோதரர்கள் ஆவார்கள். இது புரியாத காரணத்தால் சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஆத்மாக்களாகிய நீங்கள் சகோதரர்கள் ஆவீர்கள். ஒரு தந்தையின் குழந்தைகளாக ஆகியுள்ளீர்கள். நிச்சய புத்தி உள்ளவர்கள் வரிசைக்கிரமமாக உள்ளார்கள். லௌகீக சம்மந்தத்தில் தந்தையிடமிருந்து ஆஸ்தி பெற வேண்டும் என்ற நிச்சயம் இருக்கவே இருக்கிறது. இங்கு மாயை தந்தையிடமிருந்து அடிக்கடி முகத்தைத் திருப்பி விடுகிறது. சர்வ சக்திவான் தந்தையினுடையவராக ஆகிறீர்கள் என்றால் மாயை கூட சர்வ சக்திவான் ஆகி சண்டையிடுகிறது. ஐந்து விகாரங்கள் மீது வெற்றி அடைவதற்கான யுத்தம் ஆகும். யுத்தமோ பெயர் பெற்றது. மற்றபடி சாஸ்திரங்களில் காண்பித்துள்ள கௌரவர்கள் பாண்டவர்கள் என்ற விஷயம் கிடையாது. இது இராவணனுடனான மிகப்பெரிய யுத்தம் ஆகும். நாம் தந்தையின் நினைவில் இருந்து சம்பூர்ணமாகலாம், ஆத்மா தூய்மையாக ஆக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அதற்கு யோகத்தைத் தவிர வேறு எந்த வழியும் கிடையாது. யோகம் என்று பிறர் எவற்றைக்

கற்கிறார்களோ அவை ஒன்றும் தூய்மைக்காக இல்லை. அதுவோ எல்லாமே ஸ்தூல யோகமாகும். குறுகிய காலத்திற்கானதாகும். ஆனால் இந்த ஆன்மீக யோகமானது (எவர் ப்யூர்) சதா காலத்திற்குமாக தூய்மை ஆவதற்கானதாகும். தூய்மையின் கடலுடன் நாம் (யோகம்) நினைவு யாத்திரை செய்வதால் தூய்மையாக ஆகிறோம். இந்த யோக அக்னியினால் உங்களுடைய பல பிறவிகளின் பாவங்கள் சாம்பலாகிறது என்று தந்தை கூறுகிறார். இது தூய்மையற்ற உலகமாக உள்ளது என்று புத்தியும் கூறுகிறது. இது சத்யுகமா இல்லை கலியுகமா என்று யாரிடம் வேண்டுமானாலும் கேளுங்கள். ஆனால் இதை சத்யுகம் என்று யாருமே கூற மாட்டார்கள். சத்யுகமோ புதிய உலகமாக இருந்தது. அதை "கோல்டன் ஏஜ்" (தங்க யுகம்) இதை "அயர்ன் ஏஜ்" (இரும்பு யுகம்) என்று கூறப்படுகிறது. பழைய உலகம் கலியுகம் என்றும் புதிய உலகம் சத்யுகம் என்றும் கூறப்படுகிறது. அப்படி இன்றி இப்பொழுது சத்யுகமும் இருக்கிறது, கலியுகமும் இருக்கிறது என்பதல்ல. நரகவாசி என்றாலே நரகவாசி தான். பழைய உலகத்தை தூய்மையற்றது என்றும் புதிய உலகத்தை தூய்மையான உலகம் என்றும் கூறுவார்கள். மனிதர்களுக்காகத் தான் புரிய வைக்கப்படுகிறது. மிருகங்கள் பதீத பாவனரே வாருங்கள் என்று கூறுவார்களா என்ன? யாரை வேண்டுமானாலும்

கேட்டுப் பாருங்கள் - இதை நரகம் என்று தான் கூறுவார்கள். பாரதம் தான் புதிய உலகம் சொர்க்கமாக இருந்தது. பாரதம் தான் பழைய உலகம் நரகமாக உள்ளது. பாரதத்தின் மீது தான் இதை வலியுறுத்திக் கூறிக் கொண்டே இருங்கள். மற்ற எல்லோருமே இடையில் தான் வருகிறார்கள். அதற்கும் நமக்கும் தொடர்பு இல்லை. நமது தர்மமே தனி ஆகும். அது இப்பொழுது பெரும்பாலும் மறைந்து விட்டுள்ளது.

இப்பொழுது நீங்கள் நிச்சய புத்தி உடையவர்கள் ஆகியுள்ளீர்கள். நாம் ஒரு தந்தையின் குழந்தைகள் ஆவோம் என்பதை அறிந்துள்ளீர்கள். தந்தையிடமிருந்து நமக்கு சுய இராஜ்யம் கிடைக்கிறது. முதலில் இந்த உறுதியான நிச்சயம் வேண்டும். ஞானம் கேட்கிறார்கள். அது சரி தான், பிரஜைகள் உருவாகிக் கொண்டே போகிறார்கள். மற்றபடி நாம் எல்லையில்லாத தந்தையின் குழந்தைகள் ஆவோம் என்ற நிச்சயம் ஆக வேண்டும். நாம் பகவானை அடைவதற்காக பக்தி செய்தோம் என்று புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது பக்தி முடிவடைகிறது. இப்பொழுது சுயம் பகவான் வந்து சந்தித்துள்ளார். அவரிடமிருந்து சூரிய வம்ச சுயராஜ்ய பதவி கிடைக்கிறது. நாம் இவ்வளவு உயர்ந்த பதவி அடைகிறோம். எப்படி செல்வந்தர்கள் குழந்தையை மடியில் எடுக்கிறார்கள் (சுவீகாரம் செய்கிறார்கள்)

அல்லவா? அவர்களோ ஒரு குழந்தையை எடுக்கிறார்கள். இங்கோ எல்லையில்லாத தந்தைக்கு அனேக குழந்தைகள் வேண்டும். யார் எனது குழந்தை ஆகிறாரோ அவர்களுக்கு சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கும் என்று கூறுகிறார். யார் என்னுடையவராக ஆவதில்லையோ பின் ஆஸ்தி எடுக்க முடியாது. ஸ்ரீமத்படியே நடப்பதில்லை. யாருக்கு நிச்சயம் ஆகி விடுகிறதோ, அவர்கள் "பாபா நீங்கள் மீண்டும் வந்துள்ளீர்கள், அவ்வளவு தான் இனி நாங்களோ உங்கள் கையை விட மாட்டோம்" என்று கூறுவார்கள். தந்தை குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். குழந்தைகள் பிறகு "நாங்கள் பரலோக தந்தையின் குழந்தைகளாக ஆகியுள்ளோம். அவருடைய ஸ்ரீமத்படி நாங்கள் நடக்கிறோம். எங்களுக்கு பரமபிதா பரமாத்மா படிப்பிக்கிறார்" என்பதை மற்றவர்களுக்குப் புரிய வைக்கிறார்கள். இத்தனை பேர் எல்லோரும் பி.கே. ஆகி உள்ளார்கள் என்றால் அவசியம் நிச்சயம் உள்ளது. ஆக நாம் கூட ஏன் ஆகக் கூடாது. நாங்கள் உங்களுடையவர்களாக ஆகி உள்ளோம் என்று எழுதி அனுப்பட்டுமே. நான் ஏதோ தூரத்தில் இருக்கிறேனா என்று தந்தை கூறுவார். நானோ இங்கே அமர்ந்துள்ளேன். ஆஜராக உள்ளேன். இங்கு நடைமுறையில் உங்கள் முன்பாக அமர்ந்துள்ளேன். எப்படி ஜனாதிபதியை இந்த சிருஷ்டியில் ஆஜராகி உள்ளார் என்பார்கள். இதன் பொருள் ஜனாதிபதி

சர்வவியாபி ஆவார் என்பதல்ல. அதே போல எந்த பரமபிதா பரமாத்மாவிற்கு சுகத்தை அளிப்பவர் துக்கத்தை நீக்குபவர் (சுக கர்த்தா, துக்க ஹர்த்தா) என்று கூறப்படுகிறதோ அவர் சர்வ வியாபி ஆக முடியாது. தந்தை ஆஜராகாமல் இருக்கும் சொர்க்கத்தில் கூட யாருமே துக்கமுடையவராக இல்லாமலிருக்கும் பொழுது அவர் ஆஜராக ஆகி இருக்கும் பொழுது, மனிதர்கள் இவ்வளவு துக்கமுடையவராக எப்படி ஆக முடியும்?

தந்தை குழந்தைகளுக்காக கூடு (பறவைகள் தங்குமிடம்) அமைத்துள்ளார். எப்படி பறவைகள் குஞ்சுகளுக்காக கூடு அமைக்கிறது. அதே போல தந்தையும் உங்களுக்காக உங்கள் மூலமாக கூடு அமைக்கிறார். நீங்கள் வசிப்பதற்காகவே சொர்க்கம் என்ற கூடு தயாராகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் என் வழிப்படி நடந்தீர்கள் என்றால் சொர்க்கத்தில் ஆட்சி புரிவீர்கள் என்று தந்தை கூறுகிறார். ஒரு வேளை முழு நிச்சயம் ஆகி இருந்தது என்றால் ஒரேயடியாக பிடித்துக் கொண்டு விடுவார்கள். அதற்காக இங்கேயே அமர்ந்து விட வேண்டும் என்பதும் அல்ல. வீடு வாசலையோ விட வேண்டியதில்லை. அவர்களோ வீடு வாசலை விடுகிறார்கள். குருவை பகவான் என்று நினைக்கிறார்கள். அவர்கள் ஒன்றும் உயிருடன் இறந்து இருப்பது இல்லை. நீங்கள் உயிருடனிருந்தே இறந்து

பிறகு சத்யுகத்தில் வாழ வேண்டும். நீங்கள் தந்தையிடமிருந்து எல்லையில்லாத ஆஸ்தி எடுக்கிறீர்கள். எல்லையில்லாத தந்தை கற்பிக்கிறார், 21 பிறவிகளுக்கு ஆஸ்தி அளிக்கிறார் என்ற நிச்சயம் ஆகியது என்றால் அவரது ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். குழந்தையாக ஆனார் என்றால் பின் தந்தை டைரக்ஷன் வழி முறை கொடுப்பார். முதலிலோ ஒரு வாரம் பட்டியில் (ஆழ்ந்த முயற்சி) அமருங்கள். உங்களுக்கு தினமும் ஞானம் கிடைத்து கொண்டிருக்கும். எல்லோருமோ ஒன்று போல புரிந்து கொள்வதில்லை. ஒவ்வொருவரும் அவரவர் முயற்சி மற்றும் அதிர்ஷ்டத்திற்கேற்ப அடைகிறார்கள். புருஷார்த்தம் (முயற்சி) மற்றும் பாக்கியத்திற்கேற்ப தான் அமைகிறது. அதிர்ஷ்டத்தில் என்ன உள்ளது என்பது தெரிய வருகிறது. என்ன பதவி அடைவார்கள்? தந்தையினுடையவரான பிறகு இல்லற விவகாரங்களில் கூட இருக்க வேண்டும். நல்லது. இல்லற விவகாரங்கள் இல்லை என்றால் சென்று குருடர்களின் கைத்தடி ஆகுங்கள். சத்திய நாராயணரின் கதை அவசியம் கூற வேண்டும். இப்பொழுது பாருங்கள், பிரேம் சகோதரி (குழந்தை) சேவையில் சென்றுள்ளார். யார் அழைப்பு அளித்தார்களோ அவர்கள் ஏற்பாடு செய்தார்கள், அநேகரை சந்திக்குமாறு செய்தார்கள். பிரபாவத்தில் வந்தார்கள். ஆனால் இவர்களுக்கு எல்லையில்லாத தந்தை கற்பிக்கிறார். அவரிடமிருந்து

21 பிறவிகளுக்கு ஆஸ்தி கிடைக்கிறது என்ற நிச்சய புத்தி உடையவர் ஒருவரும் இல்லை என்று பாபா கூறுகிறார். பிரபாவத்தில் வருகிறார்கள். ஆனால் உண்மையில் ஞானக் கடலான தந்தை கற்பித்துக் கொண்டிருக்கிறார் என்ற நிச்சயம் ஆகியதா என்ன? ஆம் மிகவும் நன்றாக உள்ளது என்று மட்டும் கூறுவார்கள். வெளியில் சென்றார்களோ இல்லையோ, அவ்வளவு தான் முடிந்து (மறந்து) விட்டது. யாரோ ஒருவர் தான் புருஷார்த்தம் (முயற்சி) செய்வார்கள். தங்களுக்குள் சத்சங்கம் கூட செய்வார்கள் தான். ஆனால் என்ன செய்கிறார்களோ அதில் கூட நிச்சய புத்தி இல்லை. (ஹாஃப் காஸ்ட்) அரைகுறை என்று கூறப்படுகிறது. நிச்சயம் மற்றும் சந்தேகம். இப்பொழுது தான் தந்தை படிப்பிக்கிறார் என்பார்கள். இப்பொழுதே அது எப்படி ஆக முடியும் என்பார்கள். ஆம், தூய்மையாக ஆவது நல்லது என்பார்கள். ஆனால் தூய்மையில் இருப்பது மிகவும் கடினமாக உள்ளது. முதலிலோ நிச்சயம் வேண்டும். மன மகிழ்வுடன் எழுத வேண்டும். எப்படி பந்தனத்தில் இருக்கும் கோபிகைகள் கடிதம் எழுதுகிறார்கள். அது போல சுதந்திரமாக இருப்பவர்கள் எப்பொழுதாவது எழுதுகிறார்களா என்ன? ஒருவரைக் கூட நிச்சயபுத்தி உடையவராக ஆக்கவில்லை என்று பாபா எழுதி விடுகிறார். ஆம் சாதாரண பிரஜைகளை அமைத்தீர்கள் வாரிசு தயாரிக்கவில்லை. ஒருவரும் நிச்சயபுத்தி உடையவர் ஆகவில்லை. நிச்சய புத்தி உடையவர்கள்

தான் வாரிசு ஆகிறார்கள். ஒரு சிலர் நிச்சய புத்தி உடையவர்களாக இருக்கிறார்கள் என்றாலும் கூட ஞானம் எடுப்பதில்லை என்றால் அதே குடும்பத்திற்குள் போய் தாச-தாசியாக ஆகிறார்கள். முன்னால் போகப் போக மிகச் சரியாக சாட்சாத்காரம் ஆகும். நாம் எந்த நம்பரில் தாச-தாசி ஆகப்போகிறோம் என்பதும் தெரிய வரும். பிறகு மிகவும் பச்சாதாபப்படுவார்கள். நாங்களோ ஸ்ரீமத்படி நடக்கவில்லை. அதனால் இந்த நிலை ஏற்பட்டது. பிறகு ஒவ்வொரு நிலைமையிலும் டிராமா என்றே கூற வேண்டும். இவர்களுக்கு நாடகத்தில் கல்ப கல்பாந்திரமாக இவ்வாறே பாகம் உள்ளது. சாட்சாத்காரம் ஆக வேண்டியே உள்ளது. கடைசியில் ரிஸல்ட் (முடிவுகள்) வெளிப்பட வேண்டி உள்ளது. பிறகு நாடகத்தின் செயல் என்று தான் கூற வேண்டும். நமது அதிர்ஷ்டத்தில் இது இருந்தது. உங்களது படிப்பின் ரிஸல்ட் வரும். இதுவோ மிக பெரிய பாடசாலை ஆகும். கற்பிப்பவர் ஒருவரே ஆவார். ஒரே படிப்பு ஆகும். ஒரே தேர்வு ஆகும். இந்த மாணவர் எப்படி என்பதை ஆசிரியர் அறிந்திருப்பார். எல்லோரும் முன்னேறிக் கொண்டே இருக்கிறார்கள். முன்னால் போகப்போக நிறையவே தெரிய வந்து விடும். எப்படி ஆரம்பத்தில் தியானத்தில் சென்று கொண்டிருந்தீர்களோ அவ்வாறே அடிக்கடி நீங்கள் தியானத்தில் சென்று விடுவீர்கள். நீங்களும் புரிந்து கொண்டே இருக்கிறீர்கள். தந்தையும் புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். நீங்கள் தவறு

செய்கிறீர்கள், ஸ்ரீமத் படி நடக்காமல் இருக்கிறீர்கள். இவ்வாறு போகப்போக பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. சிவபாபா நாங்கள் உங்களின் ஸ்ரீமத்படி நடக்கிறோமா என்று நீங்கள் தாராளமாகக் கேளுங்கள். நீங்கள் நடப்பதில்லை. அதனால் உங்களுடைய அதிர்ஷ்டம் இவ்வாறு தென்படுகிறது என்று பாபா கூறி விடுவார். இப்பொழுது ஸ்திதி கெட்டு விட்டுள்ளது. இனி முன்னால் போக மாறவும் கூடும் என்று கருதப்படுகிறது. ஒரு சிலர் காமத்தின் லேசான போதையில் விழுகிறார்கள். பாரதம் தூய்மையாக இருந்தது. சிரேஷ்டாச்சாரியாக (உயர்ந்ததாக) இருந்தது. இப்பொழுது பிரஷ்டாச்சாரி (மோசமானதாக) ஆகி விட்டுள்ளது. அந்த சிரேஷ்ட தேவதைகளுக்கு மகிமையோ உள்ளது அல்லவா? இப்போது இருப்பதே அசுர சம்பிரதாயமாக உள்ளது என்று தந்தை கூறுகிறார். நான் தெய்வீக சம்பிரதாயத்தை ஸ்தாபனை செய்ய வந்துள்ளேன் என்று தந்தை கூறுகிறார். இந்த தேவி தேவதா தர்மம் உயர்ந்ததிலும் உயர்ந்தது ஆகும். தந்தை தான் பதீத பாவனர் ஆவார். ஆனால் மனிதர்கள் எதுவும் புரிந்து கொள்வது இல்லை. யாரெல்லாம் தர்ம ஸ்தாபனை செய்ய வருகிறார்களோ அவர்கள் அவசியம் தூய்மையாக ஆகிறார்கள். ஒவ்வொரு விஷயத்திலும் நல்லவர்கள் மற்றும் கெட்டவர்கள் என்று இருக்கிறார்கள். குறைவான அதிர்ஷ்டம் மற்றும் நல்ல அதிர்ஷ்டம் உடையவர்கள் உள்ளார்கள்.

இப்பொழுது இந்த இராவண இராஜ்யம் முடியப்போகிறது. இந்த இராவணனின் நகரத்திற்கு நெருப்பு பிடிக்க போகிறது. நீங்கள் இராமரின் சேனையில் அமர்ந்துள்ளீர்கள். யார் இந்த தர்மத்தினராக இருப்பார்களோ அவர்கள் புரிந்து கொண்டே செல்வார்கள். வரிசைக்கிரமமாகப் புரிந்து கொள்கிறார்கள். ஒரு சிலர் ஜனகரைப் போல ஒரே ஒரு அம்பு பாய்ந்த உடனேயே சமர்ப்பணம் ஆகி விடுகிறார்கள். அவர்கள் எந்த ஒரு சாக்கு போக்கும் கூற மாட்டார்கள். இதில் சாக்குப் போக்கு செல்லாது. ஆனால் மாயையின் புயல்கள் கூட நிறைய வருகின்றன. நாம் ஈசுவரிய குழந்தைகள் ஆவோம் என்று தங்கள் குடும்பத்தையே மறந்து விடுகிறார்கள். எனவே குழந்தைகள் மிகவும் இனிமையானவர் ஆக வேண்டும். காமத்தின் சிறிதளவு கூட போதை இருக்கக்கூடாது. காமம் மிகவுமே பெரிய மகா எதிரி ஆகும். இது தான் எல்லாவற்றையும் விட மிக பெரிய பரீட்சை ஆகும். குழந்தைகளே சேர்ந்து இருந்து தூய்மையாக ஆகிக் காண்பியுங்கள் என்று பாபா கூறுகிறார். தந்தை குழந்தைகளின் நிலையை அறிந்திருக்கிறார். பாபா நான் உங்களை நினைவு செய்கிறேன். உங்களுடைய இந்த சேவையை செய்கிறேன் என்று நிச்சய புத்தி உடையவர்கள் தந்தைக்கு தங்களுடைய சமாசாரத்தை கொடுப்பார்கள். சேவையின் சமாசாரம் எழுதினால் தானே நம்புவேன்.

சேவையின் நிரூபணம் காண்பித்தால் தானே இவரிடம் நல்ல நம்பிக்கை தென்படுகிறது என்று பாபா புரிந்து கொள்வார். மேலும் பாபா தனியாக இருக்கிறார் மற்றும் குழந்தைகளாகிய நாங்கள் நிறைய பேர் உள்ளோம் என்பதையும் புரிந்திருக்க வேண்டும். அப்படி இன்றி பாபா தினமும் பதிலளிக்க வேண்டியது என்பதல்ல. .தந்தை இருப்பதே ஏழைப் பங்காளனாக! தானம் ஏழைகளுக்கு அளிக்கப்படுகிறது. இந்த பாரத கண்டம் ஏழையானது ஆகும். பாரதம் தான் செல்வமிக்கதிலிருந்து ஏழையாக ஆகி விட்டுள்ளது. இது யாருக்குமே தெரிவதில்லை. இந்த பாரதம் தான் அழிவற்ற கண்டம் ஆகும். இங்கு பகவான் அவதாரம் எடுக்கிறார். பாரதம் தங்கப் பறவையாக இருந்தது. அதாவது சர்வ சுகங்களின் களஞ்சியமாக இருந்தது. அந்த சுகதாமம் செல்வதற்காக நாம் அனைவரும் புருஷார்த்தம் (முயற்சி) செய்து கொண்டிருக்கிறோம். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. எந்த ஒரு சாக்குப் போக்கும் கூறாமல் தந்தையின் ஸ்ரீமத்படி நடந்து கொண்டே இருக்க வேண்டும். சேவையின் நிரூபணம் அளிக்க வேண்டும்.

2. நாம் ஈசுவரிய குழந்தைகள் ஆவோம். நம்முடையது உயர்ந்ததிலும் உயர்ந்த குடும்பம் ஆகும் என்பதை மறக்கக் கூடாது. நிச்சய புத்தி உடையவராக ஆக வேண்டும் மற்றும் ஆக்க வேண்டும்.

வரதானம்:

பிராமண ஜென்மத்தின் விசேஷ தன்மை மற்றும் விசித்திர (புதிய மாறுபட்ட) தன்மையை நினைவில் கொண்டு சேவை செய்யக் கூடிய (சாட்சி) பார்வையாளர் ஆவீர்களாக.

இந்த பிராமண பிறவி தெய்வீக பிறவி ஆகும். சாதாரண பிறவி எடுக்கும் ஆத்மாக்கள் தங்களது பிறந்த நாளை தனியாக கொண்டாடுவார்கள். திருமண நாள், நண்பரின் நாட்களை தனியாக கொண்டாடுகிறார்கள். ஆனால் உங்களுடைய பிறந்த நாளும் ஒன்றே தான். பின் திருமண நாள், (மதர் டே) தாய்மார்களின் நாள், (ஃபாதர் டே) தந்தையின் நாள், (என்கேஜ்மெண்ட் டே) நிச்சயதார்த்த நாள் எல்லாமே ஒன்று தான். ஏனெனில் ஒரு தந்தையை தவிர வேறு யாருமில்லை என்பதே

உங்கள் அனைவரின் வாக்குறுதியாகும். எனவே இந்த பிறவியின் விசேஷ தன்மை மற்றும் விசித்திர தன்மையினை நினைவில் கொண்டு சேவையின் பாகத்தை நடியுங்கள். சேவையில் ஒருவர் மற்றவருக்கு துணை ஆகுங்கள். ஆனால் சாட்சியாகி (பார்வையாளர்) ஸாத்தி (துணையாளர்) ஆகுங்கள். சிறிதளவும் கூட யாரிடமும் விசேஷமான ஈடுபாடு இல்லாமல் இருக்கட்டும்.

சுலோகன்:

யாருடைய வாழ்க்கையில் பணிவுத் தன்மை மற்றும் (அத்தாரிட்டி) அதிகாரத்தின் சமநிலை இருக்கிறதோ, அவர்களே கவலையில்லாத சக்கரவர்த்தி ஆவார்கள்.